பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

20 05 2026 WEDNESDAY 6 30 PM

## வணக்கம்-மாநிலச் செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

- சாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசு மேற்கொள்வதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை, உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.
- த.வெ.க அமைச்சரவையில் இடம்பெறுவது குறித்து ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கும் அறிவித்துள்ளன.
- தமிழகத்தின் நலன் காக்க திமுக தொடர்ந்து பாடுபடும் என்று அக்கட்சி கூறியுள்ளது.
- கோவை, நீலகிரி உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- 18 வயதுக்குட்பட்டோருக்கான 4வது மற்றும் இறுதி மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா, 4-1 என்ற கோல்கணக்கில் ஆஸ்திரேலியாவை வென்றது.

>>>>><<<<<

சாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசு மேற்கொள்வதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை, உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

சாதிவாரி கணக்கெடுப்பை நடத்துவது அரசின் கொள்கை முடிவுகளுக்கு உட்பட்டது என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தினால்தான், நலத்திட்டங்களுக்கான கொள்கைகளை வகுக்க இயலும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, சாதிவாரி கணக்கெடுப்பை நடத்துவதில் எவ்வித தவறும் இல்லை என்றும் அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

>>>>><<<<<

த.வெ.க அமைச்சரவையில் இடம்பெறுவது குறித்து நிர்வாகிகளுடன் ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திரு. தொல். திருமாவளவன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய பேசிய அவர், அமைச்சரவையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியும் இடம்பெற வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய் தம்மை சந்தித்தபோது வலியுறுத்தியதாக கூறினார்.

தற்போது இதே கருத்தை மாநில அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜூனாவும் தெரிவித்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்து, கட்சியின் மூத்த நிர்வாகிகளோடு ஆலோசனை மேற்கொண்ட பிறகு முடிவு அறிவிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

த.வெ.க விடுத்த அழைப்பிற்கு, விடுதலை சிறுத்தைகள் கட்சி நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. தொல். திருமாவளவன் கூறினார்.

இதற்கிடையே, த.வெ.க அமைச்சரவையில் இடம்பெறுவது குறித்து, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியும் நாளை ஆலோசித்து முடிவெடுக்கவுள்ளதாக அக்கட்சியின் தலைவர் திரு. காதர் மொய்தீன் கூறியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தின் நலன் காக்க திமுக தொடர்ந்து பாடுபடும் என்று அக்கட்சியின் தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

திமுக தொண்டர்களுக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழகத்தின் அரசியல் போக்கை தீர்மானிக்கும் சக்தியாக திமுக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் தோல்வி காரணமாக திமுக துவண்டுவிடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

திமுகவில் பெரிய அளவிலான மாற்றங்களை செய்வதற்கு தேவையான ஆய்வுகளை தாம் மேற்கொண்டு வருவதாகவும் திரு. மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில் கூறியுள்ளார்.

>>>>><<<<<

புதுக்கோட்டை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளி பெண் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை கிடைப்பதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதுபோன்ற சம்பவங்கள் இனி நடைபெறாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை காவல்துறை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 20 லட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையும், அரசு வேலையும் வழங்கிட வேண்டும் என்றும் திரு. சண்முகம் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

>>>>><<<<<

கட்டுமான நிறுவன உரிமையாளருக்கு எதிராக குண்டர் சட்டம் பிறப்பிக்கப்பட்டது தொடர்பாக, சென்னை மாநகர முன்னாள் காவல்துறை ஆணையர் திரு. அருண் வரும் 27ஆம் தேதி நேரில் ஆஜராக வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. ஜி.ஆர். சுவாமிநாதன், திரு. லஷ்மி நாராயணன் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

தேமுதிக மாநிலங்களவை உறுப்பினர் திரு. எல்.கே. சுதிஷ் மற்றும் அவரது மனைவியுடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக, இந்த குண்டர் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

>>>>><<<<<

யூ-டியூபர் சவுக்கு சங்கர் மீதான குண்டர் சட்டத்தை தமிழக அரசு ரத்து செய்துள்ளது.

குண்டர் சட்டம் தொடர்பான ஆலோசனை வாரியம், சவுக்கு சங்கர் மீதான வழக்கினை ஆய்வு செய்ததில், அவர்மீது குண்டர் சட்டம் போடுவதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்று ஒருமனதாக பரிந்துரைத்ததை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவர்மீது பிற வழக்குகள் இல்லையென்றால், சிறையிலிருந்து விடுதலை செய்யுமாறும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

கோவை, நீலகிரி உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - துரை 51 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

விருதுநகர் மாவட்டம், செம்பொன்நெருஞ்சி கிராமத்தில் ஜல்லிக்கட்டு போட்டி வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இதில் 200-க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கமலக்கண்ணன் 45 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

நாமக்கல்லில் நடைபெற்ற கால்பந்து மற்றும் கபடி போட்டிகளுக்கான கோடைகால பயிற்சி முகாமில் பங்கேற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களை ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி இன்று வழங்கினார்.

>>>>><<<<<

செங்கல்பட்டு மாவட்டத்தில் தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்வது குறித்த ஆலோசனைக் கூட்டம், ஆட்சியர் திருமதி. மாலதி ஹெலன் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

மதுரை, கோ. புதூரில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தில் ஆட்சியர் திரு. பிரவின்குமார் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<

தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திரு. கமல் கிஷோர் இன்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

திருப்பத்தூரில், தனியார் வேலைவாய்ப்பு முகாம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாக மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி. கஸ்தூரி கூறியுள்ளார்.

>>>>><<<<<

தாம்பரம் - போடிநாயக்கனூர் இடையே வரும் 23ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 13ஆம் தேதிவரை சனிக்கிழமை தோறும் சிறப்பு ரயில் இயக்கப்படவுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. மறுமார்க்கத்தில் இந்த ரயில் வரும் 24ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 14ஆம் தேதிவரை ஞாயிற்றுக்கிழமை தோறும் இயக்கப்படவுள்ளது.

>>>>><<<<<

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆணையர் திரு. சமீரன் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

*>>>>><<<<<*

*விளையாட்டுச் செய்திகள்*

*18 வயதுக்குட்பட்டோருக்கான 4வது மற்றும் இறுதி மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா, 4-1 என்ற கோல்கணக்கில் ஆஸ்திரேலியாவை வென்றது*

*போபாலில் நடைபெற்ற இப்போட்டியில், Sweety Kujur, Diya, Priyanka Minz, Noucheen Naz ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.*

*4 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை ஆஸ்திரேலியா 3-1 என்ற ஆட்டக்கணக்கில் வென்றது.*

*>>>>><<<<<*

*மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Ashmita Chaliha காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-16, 21-13 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் Thalita Ramadhami Wiryawan-ஐ வென்றார்.*

*>>>>><<<<<*

*ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலில், இந்தியாவின் விராட் கோலி 2-வது இடத்திலும், ரோஹித் சர்மா 4-வது இடத்திலும் உள்ளனர்.*

*>>>>>END<<<<<*